




# THREE QUESTIONS
## LEO TOLSTOY

ALIEN BOOKS

# மூன்று கேள்விகள்

## ரேவதி கேசவமணி


THREE QUESTIONS
LEO TOLSTOY
ALIEN
BOOKS


மூன்று கேள்விகள்


ரேவதி கேசவமணி

# மூன்று கேள்விகள்

(Three Questions)

லியோ டால்ஸ்டாய்

தமிழில்:

ரேவதி கேசவமணி

ALIEN BOOKS

Moondru Kelvigal

Written by:

Leo Tolstoy

English Translation by: Aylmer and Louise Maude

Translated In Tamil by: Revathi Kesavamani

Published by

A L I E N B O O K S

Revathi Kesavamani ©

First Edition: June 2019

This book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the publisher's prior written consent in any form of binding or cover other than in which it is published and without a similar condition including this the rights under copyright reserved above, no part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means (electronic, mechanical, photocopying, recording or otherwise), without prior written permission of both the copyright owner and the above mentioned publisher of this book.

# முன்னுரை

கடந்த காலம் என்பது இனி இல்லை. எதிர்காலம் என்பது இன்னும் வரவில்லை. நிகழ்காலமே நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்று நிகழ் காலத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுவார் ஓஷோ.

அதையே தன்னுடைய பாணியில் ஒரு கதையாகச் சொல்லியிருக்கிறார் டால்ஸ்டாய்.

நாம் நிகழ் காலத்திற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் பொருத்தே எதிர்காலம் அமையும், கடந்த காலம் பேசப்படும்.

எப்போதும் நிகழ் காலத்தில் ஸ்திரமான முடிவுகளை எடுக்கும்போதே எதிர் காலத்தில் நிலைத்து நின்று, கடந்த காலத்தை ஜெயிக்க முடியும்.

அன்புடன்,

ரேவதி கேசவமணி

# மூன்று கேள்விகள்

ஒரு சமயம் ஓர் அரசனுக்கு இது நேர்ந்தது. எதைத் தொடங்குவதற்கும் சரியான நேரம் எது? எதைக் கேட்பதற்கும் உரிய சரியான மனிதன் யார்? அதைவிட முக்கியமாக, எந்த ஒரு காரியத்திலும் வெற்றி பெறுவதற்கு முக்கியமாகச் செய்யவேண்டியது என்ன? என்பதை அறிந்துகொள்ள வேண்டும் என்ற வேட்கை எழுந்தது.

இந்த எண்ணம் அவனுள் எழுந்ததும் அதை நாடெங்கும் அறிவிக்கச் செய்து, எந்த செயலுக்கும் சரியான நேரம், யார் மிக அவசியமான மனிதர்கள், எந்த செயலுக்கும் முக்கியமாகச் செய்ய வேண்டியது இவற்றை யார் ஒருவர் தனக்குச் சரியாகச் சொல்கிறார்களோ அவர்களுக்குப் பரிசளிக்கப்படும் என்று அறிவித்தான்.

கற்றுணர்ந்த பலரும் அரசனிடம் வந்து, ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான பதிலைச் சொன்னார்கள்.

முதலாவது கேள்விக்கு, முன்கூட்டியே திட்டமிட்டு அதன்படி கண்டிப்புடன் செயல்படுவதே எந்தச் செயலைச் செய்வதற்கும் உரிய சரியான நேரம் என்று சிலர் சொன்னார்கள். அவ்வாறு செய்யும்போதே ஒவ்வொன்றையும் அதற்கான சரியான நேரத்தில் செய்ய முடியும் என்றனர் அவர்கள். ஒவ்வொரு செயலைச் செய்வதற்கும் உரிய சரியான நேரத்தை முன்கூட்டியே முடிவு செய்வது முடியாத காரியம் என்று சிலர் தெரிவித்தனர். அதற்காகச் சரியான நேரத்திற்காக காத்திருக்காமல், அனைத்தையும் பின்தொடர்ந்து சென்று, எது மிக முக்கியமோ அதைச் செய்யவேண்டும் என்றார்கள் அவர்கள். சிலர், அரசன் என்னதான் கவனத்துடன் இருந்தாலும், தனி ஒரு மனிதனால் ஒரு செயலுக்கான சரியான நேரத்தை முடிவு செய்ய முடியாது என்பதால், மந்திரிகள் சபையே அரசனுக்குச் சரியான நேரத்தைக் குறித்துச் சொல்ல முடியும் என்றனர்.

ஆனால் சிலர், சில விசயங்களை மந்திரிகள் சபையின் முடிவுக்காகக் காக்க வைக்க முடியாது என்பதால், அதைச் செய்வதா வேண்டாமா என்பதை உடனடியாக முடிவெடுக்க வேண்டும் என்றனர். அதற்காக முன்னதாகவே என்ன நடக்கும் என்பதை ஒருவர் அறிந்திருக்க வேண்டியது அவசியம். மந்திரவாதிகள் மட்டுமே முன்கூட்டி அறியமுடியும் என்பதால், செயலின் சரியான நேரத்தை முடிவுசெய்ய மந்திரவாதியை அணுக வேண்டும் என்றார்கள் அவர்கள்.

இப்படியாகவே இரண்டாவது கேள்விக்கும் பலவிதமான பதில்களை அவர்கள் சொன்னார்கள். அரசனுக்கு மிக முக்கியமானவர்கள் மந்திரிகள், பாதிரியார்கள், மருத்துவர்கள் என்று சிலர் சொல்ல வேறு சிலர் ஒரு அரசனுக்கு வீரர்களே அவசியம் என்றார்கள்.

மூன்றாவது கேள்விக்கு, சிலர் அறிவியல்தான் உலகத்திற்கு அவசியத் தேவை என்றனர். வேறு சிலரோ போர்த்திறனே முக்கியம் என்று சொல்ல பிறர் மதம் சம்பந்தமான வழிபாடே அவசியம் என்றனர்.

இப்படியாக அனைத்து பதில்களும் வேறுவேறாக இருக்கவே அரசன் யாருடைய பதிலையும் ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தும் அவன் அந்தக் கேள்விகளுக்கான சரியான பதிலைக் கண்டுபிடிக்க விரும்பி, தனது ஞானத்தினால் பரவலாகப் புகழ்பெற்ற துறவி ஒருவரை ஆலோசிக்க முடிவு செய்தான்.

அந்தத் துறவி கானகத்தில் வசித்து வந்தார். அவர் கானகத்தை விட்டு வெளியே வராமலும், பொதுமக்களைத் தவிர பிறரைப் பார்க்காமலும் இருந்தார். எனவே அரசன் ஒரு சாதாரண மனிதனுக்குரிய ஆடைகளை அணிந்து, தனது குதிரையையும், பாதுகாவலரையும் காட்டிற்கு வெளியே விட்டுவிட்டுத் தனியாகத் துறவி இருக்குமிடம் சென்றான்.

அரசன் துறவியிருக்குமிடம் சென்று சேர்ந்தபோது, அவர் தனது குடிசைக்கு முன்னே தரையை உழுது கொண்டிருந்தார். அரசனைப் பார்த்து வரவேற்ற அவர் தொடர்ந்து உழுது கொண்டிருந்தார். துறவி மிகவும் பலவீனமாக இருந்ததால் அவர் ஒவ்வொரு முறை

தோண்டியபோதும் சிறிதளவு மண்ணே வெளியே வந்ததோடு, அவருக்குப் பலமாக மூச்சு வாங்கியது.

அவரிடம் சென்ற அரசன், “நான் உங்களைப் பார்க்கவே வந்தேன். மூன்று கேள்விகளுக்கான பதில்களைத் தெரிந்துகொள்ள வந்துள்ளேன். சரியான காரியத்தைச் சரியான நேரத்திற்குச் செய்யக் கற்றுக்கொள்வது எப்படி? எனக்கு அவசியம் தேவையான மனிதர்கள் யார்? நான் செய்யவேண்டிய எந்தக் காரியம் மிக முக்கியமானது?” என்றான்.

அரசன் சொன்னதைக் கேட்ட துறவி ஒன்றும் சொல்லவில்லை. அவர் சற்றே ஓய்வெடுத்துக்கொண்டு பின் மீண்டும் உழ ஆரம்பித்தார்.

“நீங்கள் களைத்திருக்கிறீர்கள்” என்ற அரசன், “நான் உங்களுக்காக வேலை செய்கிறேன்” என்றான்.

“நன்றி” என்ற துறவி மண்வெட்டியை அரசனிடம் கொடுத்துவிட்டுத் தரையில் அமர்ந்துகொண்டார்.

சற்று நேரம் உழுத அரசன் தனது கேள்வியை அவரிடம் மீண்டும் கேட்டான். அவர் அப்போதும் பதிலளிக்காமல் எழுந்து, மண்வெட்டிக்காக கையை நீட்டியபடி, “நீ ஓய்வெடு, நான் வேலை செய்கிறேன்” என்றார்.

ஆனால் அரசன் அவரிடம் மண்வெட்டியைத் தராமல் தொடர்ந்து உழுதான். இப்படியே அன்றைய தினம் கடந்தது. சூரியன் மரங்களுக்குப் பின்னால் மறைய ஆரம்பித்தான். மண்வெட்டியை நிலத்தில் குத்திய அரசன் அவரிடம், “என்னுடைய கேள்விகளுக்கான பதிலைத் தேடியே தங்களிடம் வந்தேன். நீங்கள் பதிலளிக்கவில்லையெனில் அதைச் சொல்லிவிடுங்கள். நான் வீட்டுக்குத் திரும்புகிறேன்” என்றான்.

“யாரோ இங்கே ஓடி வருவதாகத் தெரிகிறது” என்ற துறவி, “அது யாரென்று பார்க்கலாம்” என்றார்.

திரும்பிப் பார்த்த அரசன், தாடி வைத்த ஒரு மனிதன் காட்டிற்கு வெளியிலிருந்து ஓடி வருவதைக் கண்டான். தனது வயிற்றை கைகளால் அழுத்திப் பிடித்தபடி, ரத்தம் ஒழுக அவன் ஓடி வந்தான். அரசனை நெருங்கிய அவன் மெலிதாக முனகிக்கொண்டே தரையில்

நிலைகுலைந்து விழுந்தான். அரசனும் துறவியும் அந்த மனிதனின் ஆடைகளைக் களைந்தனர். அவனுடைய வயிற்றில் பெரிய காயம் ஏற்பட்டிருந்தது. அரசன் அதைக் கழுவித் துடைத்துத் தன்னுடைய கைக்குட்டை, துறவியின் துண்டு இவற்றைக்கொண்டு காயத்தைக் கட்டினான். ஆனாலும் ரத்தம் நிற்கவில்லை. ரத்தத்தால் நனைத்த அவற்றை அரசன் மீண்டும் மீண்டும் கழுவிவிட்டுத் திரும்பத் திரும்பக் கட்டினான்.

கடைசியில் ஒருவழியாக ரத்தம் நின்றது. அந்த மனிதன் குடிப்பதற்கு ஏதாவது வேண்டும் என்று கேட்டான். அரசன் சுத்தமான தண்ணீரைக் கொணர்ந்து அவனுக்குக் கொடுத்தான். அந்த நேரத்தில் சூரியன் மறைந்துவிட, எங்கும் குளுமை சூழ்ந்தது. எனவே அரசன் துறவியின் துணையோடு அவனைக் குடிசைக்கு எடுத்துச் சென்று படுக்கையில் படுக்க வைத்தான். படுக்கையில் படுத்த அவன் சற்று நேரத்தில் கண்ணயர்ந்தான். வேலையாலும், நடந்த களைப்பாலும் சரிந்து படுக்கையின் ஓரத்தில் அமர்ந்த அரசன் சீக்கிரமே ஆழ்ந்த தூக்கத்தில் விழுந்தான். காலையில் கண்விழித்தபோது, ஆழ்ந்த தூக்கத்தாலும், தாடியுடன் இருக்கும் புதிய மனிதன் ஒருவன் தன்னையே வியப்புடன் பார்ப்பதைக் கண்டும், அரசன் ஒரு கணம் தான் எங்கே இருக்கிறோம் என்பதை நினைவுக்குக் கொண்டு வந்தான்.

அரசன் தூக்கத்திலிருந்து எழுந்து தன்னைப் பார்ப்பதை அறிந்த தாடி மனிதன், “என்னை மன்னியுங்கள்” என்று மெல்லிய குரலில் சொன்னான்.

“எனக்கு உன்னைத் தெரியாது. உன்னை மன்னிக்க ஒன்றுமில்லை” என்றான் அரசன்.

“என்னை உங்களுக்குத் தெரியாது ஆனால் நான் உங்களை அறிவேன். சகோதரனைக் கொன்று அவனது செல்வங்களை எடுத்துக்கொண்டதால், உங்கள் மீது வஞ்சினம் கொண்டு உங்களைக் கொன்று பழிதீர்க்க முயலும் உங்கள் எதிரியைச் சார்ந்தவன் நான். நீங்கள் துறவியைச் சந்திக்க காட்டிற்குத் தனியாக வந்திருப்பதை

அறிந்து, அவரைச் சந்தித்துத் திரும்புகையில் உங்களைக் கொல்லக் காத்திருந்தேன். ஆனால் இருள் கவியத்தொடங்கிய போதும் நீங்கள் வரவில்லை. எனவே நான் மறைந்திருந்த இடத்திலிருந்து வெளியேறி உங்களைத் தேடினேன். ஆனால் என்னை அடையாளம் கண்டு கொண்ட உங்கள் பாதுகாவலன் என்னைத் தாக்கிக் காயப்படுத்தினான். நான் அவனிடமிருந்து தப்பித்து, ரத்தப்போக்கால் சாக இருந்த நான் உங்களால் பிழைத்தேன். நான் உங்களைக் கொல்ல விரும்பினேன் ஆனால் நீங்கள் என்னைப் பிழைக்க வைத்தீர்கள். நான் உயிரோடிருந்தால், நீங்கள் விரும்பினால் உங்களது விசுவாசமிக்க அடிமையாக இருப்பதோடு எனது மகன்களையும் அவ்வாறே இருக்கச் செய்வேன். என்னை மன்னியுங்கள்."

தனது எதரியோடு இருந்த பகை வெகு சுலபமாக சுமுகமாக முடிந்ததை எண்ணி மகிழ்ந்த அரசன், அவனை மன்னித்ததோடு, தனது வேலைக்காரர்களையும் மருத்துவரையும் அவனைக் கவனிக்கச் சொல்லி ஆணையிட்டு, அவனது செல்வங்களையும் திருப்பிக் கொடுப்பதாக வாக்குக் கொடுத்தான்.

அதன் பிறகு அங்கிருந்து அகன்ற அரசன் துறவியைத் தேடினான். அங்கிருந்து திரும்பிச் செல்லும் முன் தனது கேள்விகளுக்கான பதிலைத் தெரிந்துகொள்ள அவன் விரும்பினான். குடிசைக்கு வெளியே மண்டியிட்டு அமர்ந்த துறவி நேற்றைய தினம் உழுத நிலத்தில் விதைகளைத் தூவிக்கொண்டிருந்தார்.

அவரை நெருங்கிய அரசன், "எனது கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும் என்று கடைசி முறையாகக் கேட்டுக் கொள்கிறேன்" என்றான்.

"உனக்கு முன்பே பதில் சொல்லப்பட்டுவிட்டது" என்ற துறவி, தன் முன்னே நிற்கும் அரசனைப் பார்த்தார்.

"எப்படி? நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்றான் அரசன்.

"நீ பார்க்கவில்லையா" என்ற துறவி பதிலளித்தார். "நேற்று நீ என்னுடைய பலவீனத்தைக் கண்டு பரிதாபம் கொண்டு எனக்காக

நிலத்தை உழவில்லை என்றால் நீ உன் வழியே சென்றிருப்பாய். அப்போது அந்த மனிதன் உன்னைத் தாக்கியிருப்பான். அப்போது நீயும் என்னுடன் தங்கவில்லை என்பதற்காக வருந்தியிருப்பாய். எனவே மிக முக்கியமான நேரம் என்னவெனில் நீ நிலத்தை உழுததுதான். நான்தான் மிக முக்கியமான மனிதன். எனக்கு நல்லது செய்ததே உன்னுடைய முக்கியமான வேலை. அதன் பிறகு அந்த மனிதன் நம்மை நோக்கி ஓடிவந்தபோது நீ அவனைக் கவனித்துக்கொண்டதே முக்கியமான நேரம். நீ அவனது காயத்திற்குத் தகுந்த சிகிச்சை செய்திராவிட்டால், உன்னோடு நட்பு கொள்ளாமலே அவன் இறந்திருப்பான். அவனே முக்கியமான மனிதன். அவனுக்கு நீ செய்ததே மிக முக்கியமான காரியம்.

நினைவில் வைத்துக்கொள். எப்போதும் ஒரே ஒரு நேரம் மட்டுமே முக்கியமானது. இப்போது! இதுவே மிக முக்கியமான நேரம் ஏனெனில் இதுவே நாம் ஆற்றலோடு இருக்கும் நேரம். நீ ஒரு மனிதனுக்கு என்னவாக இருக்கிறாய் என்பதைப் பொருத்தே யார் முக்கியமான மனிதன் என்பதை அறியமுடியும். எந்த ஒரு மனிதனும் தனக்கு யாருடன் எப்படித் தொடர்பு ஏற்படும் என்பதை அறிய முடியாது. மிக முக்கியமான காரியம் என்னவெனில் நல்லது செய்வது. ஏனெனில் அதன் பொருட்டே மனிதனுக்கு இந்த வாழ்க்கை கொடுக்கப்பட்டுள்ளது."